C.E.
J.C.E.
D.C.E.
A.O.
Supdt.

## சுருக்கம்

பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் - திருமதி பி.சாந்தி, க/பெ. காலஞ்சென்ற திரு சு.சுகுமார் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பொதுப்பணித்(பி1) துறை

அரசாணை (2ப) எண்.84

நாள் : 05.10.2021
பிலவ, புரட்டாசி, 19
திருவள்ளுவர் ஆண்டு, 2052

**படிக்கப்பட்டவை:-**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத்துறை, சென்னை அவர்களின் கடிதம் எண். எஸ்1(2)/0703/2021, நாள் 16.06.2021.

-----

**ஆணை:-**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித்துறையைச் சார்ந்த தலைமைப் பொறியாளர் (கட்டடம்), மதுரை மண்டலம், மதுரை அமைப்பின் கீழ் செயல்படும் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம், பொதுப்பணித்துறை, மானாமதுரை அலுவலகத்தில் உதவிப் பொறியாளராகப் பணியாற்றிய திரு சு.சுகுமார் என்பவர் கடந்த 01.07.2013 அன்று சாலை விபத்தில் காலமானதையடுத்து, அவரது மனைவி திருமதி பி.சாந்தி என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் கண்காணிப்புப் பொறியாளர், சுற்றுச் சூழல் குழும வட்டம், நீர்வள ஆதாரத்துறை, திருச்சியின் கீழ் செயல்படும் சுற்றுச்சூழல் குழுமக் கோட்டம், கோயமுத்தூர் அலுவலகத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக 19.05.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் பிறந்த தேதி 11.05.1970 என்றும், பத்தாம் வகுப்பில் மார்ச் 1985-ல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தெரிவித்து பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 19.05.2020 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துவதற்கு உரிய அரசாணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத்துறை, சென்னை அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

C.E.
J.C.E.
D.C.E.
A.O.



2. தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத்துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், திருமதி பி.சாந்தி, இளநிலை உதவியாளர், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில், பணியமர்த்தப்பட்ட நாளான 19.05.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணி நியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்வதால், தனியர் ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அ.சா.எண்.15733/ட்டி1/2021, நாள் 17.09.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அ.சா.எண்.29597/ஜி1/2021-1, நாள் 24.09.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்ட உருவாக்கம்,
நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை - 5.
திருமதி பி.சாந்தி, இளநிலை உதவியாளர் (தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை-5 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை - 5.
மாநில கணக்காயர், சென்னை - 18.

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை /
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

Recd. original certificate
20/10/2021

பிரிவு அலுவலர்

5-10-21